# யூலை – 16 – செவ்வாய்

## புனித கார்மேல் அன்னை

**“ஆழமிகு நீர்த்திரளுள் அமிழ்ந்திருக்கின்றேன். நிற்க இடமில்லை“ - திபா 69 : 2**

---

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 2 : 1– 15

அந்நாட்களில், லேவி குலத்தவர் ஒருவர் லேவி குலப்பெண் ணொருத்தியை மணம் செய்துகொண்டார். அவள் கருவுற்று ஓர் ஆண்மகவை ஈன்றெடுத்தாள் அது அழகாயிருந்தது என்றுகண்டாள் மூன்றுமாதங்களாக அதனை மறைத்துவைத்திருந்தாள். இதற்கு மேல் அதனை மறைத்துவைக்க இயலாததால், அதனுக்காகக் கோரைப்புல்லால் பேழை ஒன்றுசெய்து அதன்மீது நிலக்கீல், கீல் இவற்றைப் பூசினாள் குழந்தையை அதனுள் வைத்து நைல்நதிக் கரையிலுள்ள நாணல்களுக்கிடையில் விட்டுவைத்தாள். அதற்கு என்ன ஆகுமோ என்பதை அறிந்துகொள்ளக் குழந்தையின் சகோதரி தூரத்தில் நின்றுகொண்டிருந்தாள். அப்போது பார்வோனின் மகள் நைல்நதியில் நீராட இறங்கிச்சென்றாள். அவள்தோழியரோ நைல் நதிக்கரையில் உலாவிக் கொண்டிருந்தனர். அவள் நாணலிடையே பேழையைக்கண்டு தன்தோழி ஒருத்தியை அனுப்பி அதை எடுத்தாள் அதைத் திறந்தபோது ஓர் ஆண்குழந்தையைக் கண்டாள் அது அழுதுகொண்டிருந்தது. அதன்மேல் அவள் இரக்கம் கொண்டாள். ”இது எபிரேயக் குழந்தைகளுள் ஒன்று” என்றாள் அவள். உடனே குழந்தையின் சகோதரி பார்வோனின் மகளைநோக்கி, ”உமக்குப் பதிலாகப் பாலூட்டி இக்குழந்தையை வளர்க்க, எபிரேயச் செவிலி ஒருத்தியை நான் சென்று அழைத்து வரட்டுமா?” என்றுகேட்டாள். பார்வோனின் மகள் அவளை நோக்கி, ”சரி. சென்று வா” என்றாள். அந்தப் பெண் சென்று குழந்தையின் தாயையே அழைத்து வந்தாள். பார்வோனின் மகள் அவளை நோக்கி, ”இந்தக் குழந்தையை நீ எடுத்துச் செல். எனக்குப் பதிலாக நீ பாலூட்டி அதனை வளர்த்திடு. உனக்குக் கூலிகொடுப்பேன்” என்றாள். எனவே குழந்தையை எடுத்துச் சென்று அதனைப் பாலூட்டி வளர்த்தாள் அப்பெண். குழந்தை வளர்ந்தபின் அவள் பார்வோனின் மகளிடம் அவனைக் கொண்டுபோய் விட்டாள். அவள் அவனைத் தன்மகன் எனக்கொண்டாள். ”நீரிலிருந்து நான் இவனை எடுத்தேன்” என்று கூறி அவள் அவனுக்கு ”மோசே” என்றுபெயரிட்டாள். அக்காலத்தில் மோசே வளர்ந்துவிட்டபோது தம் இனத்தவரிடம் சென்றிருந்தார் அவர்களுடைய பாரச்சுமைகளையும் பார்த்தார் மேலும், தம் இனத்தவனான எபிரேயன் ஒருவனை எகிப்தியன் ஒருவன் அடிப்பதையும் கண்டார். சுற்றுமுற்றும் பார்த்து, யாருமே இல்லையெனக்கண்டு, அந்த எகிப்தியனை அடித்துக் கொன்று மணலுக்குள் புதைத்து விட்டார். அடுத்த நாள் அவர் வெளியே சென்றபோது, எபிரேயர் இருவருக்கிடையே கைகலப்பு நடந்து கொண்டிருந்ததைக்கண்டார் குற்றவாளியை நோக்கி ”உன் இனத்தவனை ஏன் அடிக்கிறாய்?” என்றுகேட்டார். அதற்கு அவன், ”எங்கள்மேல் உன்னைத் தலைவனாகவும் நடுவனாகவும் நியமித்தவன் எவன்? எகிப்தியனைக் கொன்றதுபோல் என்னையும் கொல்லவா நீ இப்படிப் பேசுகிறாய்?” என்று சொன்னான். இதனால் மோசே அச்சமுற்றார் ”நடந்தது தெரிந்துவிட்டது உறுதியே” என்று சொல்லிக் கொண்டார்!, இச்செய்தியைப் பார்வோன் கேள்வியுற்ற போது மோசேயைக் கொல்லத்தேடினான். எனவே மோசே பார்வோனிடமிருந்து தப்பியோடி, மிதியான் நாட்டில் குடியிருக்க வேண்டியதாயிற்று.

**பதில்பாடல் :** கடவுளை நாடித் தேடுவோரே உங்கள் உள்ளம் உக்கமடைவதாக.

## நற்செய்தி : மத்தேயு 11 : 20 - 24

அக்காலத்தில், இயேசு வல்லசெயல்கள் பல நிகழ்த்திய நகரங்கள் மனம்மாறவில்லை. எனவே அவர் அவற்றைக் கண்டிக்கத் தொடங்கினார். ”கொராசின் நகரே, ஐயோ! உனக்குக்கேடு! பெத்சாய்தா நகரே, ஐயோ! உனக்குக்கேடு! ஏனெனில் உங்களிடையே செய்யப்பட்ட வல்லசெயல்கள் தீர், சீதோன் நகரங்களில் செய்யப்பட்டிருந்தால் அங்குள்ள மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்திச் சாம்பல்பூசி மனம்மாறியிருப்பர். தீர்ப்பு நாளில் தீருக்கும் சீதோனுக்கும் கிடைக்கும் தண்டனையை விட உங்களுக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன். கப்பர்நாகுமே, நீ வானளாவ உயர்த்தப்படுவாயோ? இல்லை, பாதாளம்வரை தாழ்த்தப்படுவாய். ஏனெனில் உன்னிடம் செய்யப்பட்ட வல்ல செயல்கள் சோதோமில் செய்யப்பட்டிருந்தால் அது இன்றுவரை நிலைத்திருக்குமே! தீர்ப்பு நாளில் சோதோமுக்குக் கிடைக்கும் தண்டனையை விட உனக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும் என நான் உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார்.

**தியானம்:** இறைமகன் கிறிஸ்து இயேசுவுக்கும் கோபம், வெறுப்பு, ஏற்படுமா? அதிலும் மேலாக சபிக்கின்ற அளவிற்கு அவர் கொடியவரா? இப்படியான கேள்விகள் இன்றைய நற்செய்தியை வாசிக்கும் ஒருவரது மனதினில் எழலாம். அப்படியாயின் இறைமகன் இயேசுவின் கருணை, இரக்கம் எங்கே போய்விட்டது? உண்மையிலேயே எமது பாவங்களுக்காக நாம் அதிகமதிகம் வருந்தி அவரது மன்னிப்பை நாடவேண்டுமா? என்றுகூட மனதின் ஆழத்தில் பலவித சிந்தனைகள் உருவாகலாம். எனவே இன்றைய நற்செய்தியை ஒருமுறை நாம் சற்று ஆழமாக ஆராய்ந்து பார்ப்போம். இன்றைய ந்செய்தியில் இறைமகன் இயேசு தாம் போதித்த கலிலேயாக் கடற்கரை ஓரங்களில் இருந்த கொராசின், பெத்சாய்தா நகர மக்கள் மனம்மாறவில்லை எனவருந்தி சபிக்கும் அளவிற்கு வேதனையுறுகின்றார். இச்சம்பவம் இறைமகன் எமது பாவங்களுக்காகப் பாடுபடுமுன்னர் இடம்பெற்றது. அப்படியாயின் அவரது வேதனை மிகுந்த கொடிய பாடுகள், மரணம் மற்றும் அவரது வெற்றிகரமான உத்தானத்தின் பின்னர் நாம் இன்னமும் மனம்மாறாது வாழும்போது எவ்வளவு மிகப்பெரிய துரோகத்தை செய்து கொண்டிருக்கின்றோம்? ஆகவே இறைமகன் இயேசு எம்மாலே செய்ய முடியாத காரியத்தை செய்யமுன்வருமாறு எம்மை நிர்ப்பந்திக்கின்றாரா? ஏனெனில் நாம் மறுத்தால் “தீர்ப்புநாளில் சோதோமுக்குக் கிடைக்கும் தண்டனையைவிட உனக்குக் கிடைக்கும் தண்டனை கடினமாகவே இருக்கும்” எனவும் எச்சரிக்கின்றார். இறைமகன் இயேசு எமக்காக பட்ட பாடுகளை அனுதினமும் நினைவில்கொள்வோம். முடிந்த வரையில் அடிக்கடி மனம்வருந்தி நல்ல பாவசங்கீர்த்தனம் செய்துகொள்வோம். கூடியவரையில் திருப்பலியில் தகுதியுடன் பங்குபெறுவோம். திருவிருந்தில் சமபந்தி போசனம் செய்ய ஆயத்த நிலையில் இருப்போம். இறைத்தன்மையுடைய இறைமகன் இயேசு தமது போதனையால் மட்டுமல்ல தனது வாழ்வாலும் எமக்கு நன்நெறியின் பாதையைக் காட்டியுள்ளார். அந்த வாழ்வினை நாமும் வாழுவதற்கு முன்வருவோமா?. இறுதிக்காலம் இதுவென உணர்ந்து முன் மதியோடு நன்நெறியில் நடப்போம். இல்லையெனில் நாங்கள் விண்ணரசில் புகமுடியாது.